# பாரம்பரிய நெல் ரகங்கள்

எஸ். ஆறுமுகசாமி, என். ஜெயசங்கர், கே. சுப்பிரமணியன்,
சுபாஷிணி ஸ்ரீதர், கே. விஜயலட்சுமி

CIKS
PAN-AP

ஜனவரி – 2001

| | |
|---|---|
| *தலைப்பு* | *பாரம்பரிய நெல் ரகங்கள்* |
| *வெளியீடு* | *ஜனவரி 2001* |
| *வெளியிட்டோர்* | *இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், சென்னை* (Centre for Indian Knowledge Systems, Chennai) |
| *நிதியுதவி* | *பூச்சிமருந்து குறித்த ஒருங்கிணைந்த நடவடிக்கை இணைப்பு, பினாங்கு, மலேசியா* (Pesticide Action Network (PAN-AP) Penang, Malaysia) |
| *பிரதிகள் கிடைக்குமிடம்* | *இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் எண். 30, காந்திமண்டபம் சாலை கோட்டூர்புரம், சென்னை - 600 085 ✆ : (044) 4471087, 4475862* |
| *முகப்பு அமைப்பு* | *விஸ்தாஸ் டிசைன் சொல்யூஷன்ஸ் பி. லிட்., சென்னை.* (Vistaas Design Solutions Pvt. Ltd., Chennai) |
| *முகப்பு புகைப்படம்* | *வீ. கார்த்திக், ஈகோடோன், சென்னை* (V. Karthik, Ecotone, Chennai) |
| *புகைப்படங்கள்* | *வி.எஸ். வெங்கட்ராமன், எஸ்.யூ. சரவணகுமார்* |
| *படங்கள்* | *உமா கிருஷ்ணசாமி, வீ. சரஸ்வதி, எல். லட்சுமி* |
| *அச்சுக்கோப்பு* | *எஸ். ரமேஷ்* |
| *அச்சிட்டோர்* | *மல்டி கிராப்ட் 94, வீரபெருமாள் கோவில் தெரு மைலாப்பூர், சென்னை - 600 004.* |

# நன்றி

*பாரம்பரிய விவசாயத்தை ஊக்குவிப்பதிலும் பாரம்பரிய பயிர் ரகங்களைப் பாதுகாக்கும் பணியிலும் கடந்த ஆறு ஆண்டுகளாக எங்கள் மையம் ஈடுபட்டுள்ளது. எங்கள் களப்பணியின் மூலம் தொகுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நெல் ரகங்களைப் பற்றிய விவரங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தை வெளியிட்டுள்ளோம்.*

*இந்தப் பணியில் எங்களை ஈடுபடச் செய்து ஆரம்ப நிலைகளில் நிதியுதவி அளித்தவர் 'நவதானியா' அமைப்பைச் சேர்ந்த டாக்டர் வந்தனா சிவா. பல்வேறு நிலைகளில் வழிகாட்டிய அவர்களுக்கு முதன்முதலில் நன்றிகூறுவது எங்கள் கடமையாகும். மேலும் இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்ய பல்வேறு நிலைகளில் உதவிய பலருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.*

*முதன் முதலாக விதை வங்கியை திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தாலுகா, வளையாம்பட்டு கிராமத்தில் அமைக்க உதவிய திரு. வெங்கடாசலம் அவர்களுக்கும், திரு. வி. அறிவுடை நம்பி அவர்களுக்கும் எங்கள் மனமுவந்த நன்றி. விதைச் சேகரிப்பின் ஆரம்ப காலத்தில் உதவிய காலஞ்சென்ற திரு. பரசுராம முதலியார் அவர்களை இந்த நேரத்தில் நன்றியுடன் நினைவுகூர்கிறோம். விதைச் சேகரிப்பின் பல்வேறு நிலைகளில் உதவிய உத்திரமேரூர், பெண்கள் நல முன்னேற்ற சங்கத்தைச்* (WWDA), *சேர்ந்த திரு. எம். தனசேகர் அவர்களுக்கும், களப்பணியாளர்கள் திரு. பி. செல்வராஜ், திரு. மகேஷ் அவர்களுக்கும் எங்கள் நன்றி.*

*இந்தப் பணிக்காக விதைகளை மனமுவந்து கொடுத்துதவிய விவசாயப் பெருமக்களுக்கு எங்கள் நன்றி. மேலும் இந்தப் பணிக்கு உதவிய தமிழகத்திலுள்ள பல்வேறு நெல் ஆராய்ச்சி நிலையங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகளுக்கும் மனமுவந்த நன்றி. இந்தப் பணிக்கு நிதியுதவி அளித்த 'கபார்ட்'* (CAPART) *என்ற மத்திய அரசு நிறுவனத்திற்கும், 'காம்பாஸ்'* (COMPAS) *என்ற நெதர்லாந்தைச் சேர்ந்த அமைப்பிற்கும், இப்புத்தகத்தை வெளியிட நிதியுதவி அளித்த பான்-ஏபி* (PAN-AP, Malaysia) *நிறுவனத்தாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.*

*இப்புத்தகத்தின் தமிழைச் செப்பனிட உதவிய நண்பர் திரு. எஸ். ராமகிருஷ்ணன் அவர்களுக்கும் எங்கள் நன்றி. இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பல விவசாயிகளை பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாக்க ஊக்குவிக்கும் என்று நம்புகிறோம்.*

*சென்னை* — *கே. விஜயலட்சுமி*
*ஜனவரி 2001*

# பொருளடக்கம்


அறிமுகம் 1

பாரம்பரிய நெல் ரகங்கள் 5

- தங்கச் சம்பா 6
- நீலஞ்சம்பா 8
- கப்பச்சம்பா 10
- வாடன் சம்பா 12
- குதிரைவால் சம்பா 14
- கலியன் சம்பா 16
- குரங்குச் சம்பா 18
- சீரகச் சம்பா 20
- சம்பா 22
- சம்பா மோசனம் 24
- கிச்சிலிச் சம்பா 26
- முட்டக்கார் 28
- குள்ளக்கார் 30
- கப்பக்கார் 32
- பெருங்கார் 34
- சிகப்புக் குருவிக்கார் 36
- வைகுண்டா 38
- ஜில்ஜில் வைகுண்டா 40
- தூயமல்லி 42
- ஜி.ஈ.பி. 24 44
- செம்பாளை 46
- குழியடிச்சான் 48
- கல்லிமடையான் 50
- பிசினி 52
- கூம்வாலை 54
- குடைவாழை 56
- பிச்சவாரி 58
- செங்கல்பட்டுச் சிறுமணி 60
- காடைக்கழுத்தான் 62
- அறுபதாம் கோடை 64
- காட்டுக் குத்தாலம் 66
- கல்லுண்டை 68
- பெரியவரி 70
- சடகார் 72

## தரம்பால் அவர்களுக்கு

# அறிமுகம்

### நெற்பயிர் பல்வகைமை

*நம் நாட்டு மக்களிடையே இயற்கையின் உயிரின வகைவளத்தைப் பற்றிய அறிவு பரம்பரை பரம்பரையாக இருந்துவந்திருக்கிறது. உயிரின வகைவளத்தைப் பற்றிய இந்த அறிவைப் பயன்படுத்தி அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் காலம் காலமாகப் பெற்றுவந்திருக்கின்றனர். இந்த வகைவளம்தான் நம்முடைய உணவு, மருத்துவம், உறைவிடம் ஆகியவற்றிற்குத் தேவையான ஆயிரக்கணக்கான தாவரங்களையும் விலங்கினங் களையும் சாத்தியமாக்கியிருக்கிறது. இந்த உயிரின வகைவளத்தைப் பற்றிய அறிவு உள்ளூர் மக்களின் பொதுச் சொத்தாக இருந்து வந்திருக்கிறது. இந்த அறிவைப் பாதுகாப்பதும், பயன்படுத்துவதும் அவர்களுடைய உரிமையாகவும் இருந்துவந்திருக்கிறது.*

*வேதகாலத்தில் இந்தியாவில் சுமார் 4,00,000 பாரம்பரிய நெல் ரகங்கள் இருந்ததாக காலஞ்சென்ற டாக்டர் ரிச்சாரியா என்ற நெல் விஞ்ஞானி கூறியுள்ளார். இன்றைக்கும் இந்தியாவில் சுமார் 2,00,000 ரகங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது அவர் கூற்று. ஒவ்வொரு ரகமும் நம்முடைய விவசாயிகளால் பலவிதங்களில் பல்வேறு தட்பவெப்ப நிலைகளில் பரிசோதனைசெய்து உருவாக்கப்பட்டவை. இந்தத் தரமான விதைகளுக்கு பல்வேறு சிறப்பம்சங்களும், பயன்களும் உள்ளன. மத்தியபிரதேசத்தில் உள்ள சட்டிஸ்கர் பகுதியில் மட்டுமே டாக்டர் ரிச்சாரியா 20,000க்கும் மேற்பட்ட நெல்ரகங்களை இனம் கண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

### பாரம்பரிய நெல்ரகங்களின் தன்மைகள்

*இன்று பாரம்பரிய நெல்ரகங்கள் நம்முடைய விவசாயிகளால் பல்வேறு காரணங்களுக்காக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. உயர்விளைச்சல் ரகங்கள் எல்லா சூழ்நிலைகளுக்கும் ஏற்றதாக இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டிலுள்ள களர் நிலங்களுக்கு களர்பாளை என்ற பாரம்பரிய ரகமே ஏற்றதாகும். வாடன் சம்பா போன்ற ரகங்கள் வறட்சியைத் தாங்கும் சக்தி பெற்றவை. பெரும்பாலான பாரம்பரிய ரகங்கள் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி கொண்டவை. குள்ளக்கார் போன்ற ரகங்களின் வைக்கோல் கூரை வேய்வதற்குப் பயன்படுத்தப்படு கிறது. நீலஞ்சம்பா, குழியடிச்சான் போன்ற ரகங்கள் பிரசவத்திற்குப் பின் தாய்மார்களால் பயன்படுத்தப்படுகிறது.*

இந்த ரகங்கள் அதிகப் பால் சுரக்க உதவுகின்றன. பிச்சவாரி என்ற ரகம் மாடுகளுக்கு ஏற்படும் கழிச்சல் நோயிலிருந்து நிவாரணம் பெறப் பயன்படுத்தப்படுகிறது. இவற்றையெல்லாம் விட புதுப்புது ரகங்களை உருவாக்க அடிப்படை மரபணுக்களை கொண்டிருப்பது நம்முடைய பாரம்பரிய ரகங்களே.

### பாரம்பரிய ரகங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம்

அண்மைக் காலம்வரை இந்திய விவசாயிகள் பலவிதங்களில் பரிசோதனைசெய்து கலப்பு விதைகளை உருவாக்கியும், தரமான விதைகளை இனம்கண்டும், தேவையான விதைகளைப் பாதுகாத்தும் வந்திருக்கின்றனர். தொழில்மயமாக்குதலும், நிறுவன ரீதியான வர்த்தகமும் விவசாயத்தில் புகுந்த பிறகு, உணவு உற்பத்தி செய்வதற்கான அடிப்படைத் திறமைகளை நம் விவசாயிகள் இழந்துவருகின்றனர். விவசாயம் வாழ்க்கை முறையாக இருந்தது போய், விவசாயம் தொழிலாக மாறி விட்டது; விவசாயிகளும் ஆலைத் தொழிலாளிகள்போல் ஆகி விட்டனர். ஒரே வகையான மரபியல் தன்மைகளைக் கொண்ட ஒரு சில 'வீரிய ரகங்கள்' மட்டுமே இன்று பெருமளவில் பயிரிடப்படுகின்றன. இதனால் உள்ளூர் நிலைக்கு ஏற்ற, விவசாயிகள் அறிந்திருந்த பாரம்பரிய ரகங்கள் இன்று மறைந்து வருகின்றன. தனியார் விதைக் கம்பெனிகளின் ஏகபோக ஆதிக்கத்தாலும், அறிவுச் சொத்துரிமைக் கட்டுப்பாடுகளாலும் இன்று விவசாயிகளின் சுதந்திரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மைக்கு விதைகள்தான் ஆதாரம். உணவு உத்தர வாதத்திற்கு விவசாய உயிரின வளவகை அடித்தளம். பசியிலி ருந்தும், ரசாயனம் சார்ந்த விவசாயத்திலிருந்தும், சந்தைகளின் ஆதிக்கச் சக்தியிலிருந்தும் நமக்கு விடுதலை அளிப்பது பல்வகைப் பயிர் விவசாயம். எனவே பயிர் பல்வகைமையைப் பாதுகாப்பது இன்றைய அவசரத் தேவையாகும்.

### பாரம்பரிய நெற்பயிர் பாதுகாப்புக்கு கிராமப்புற விதை வங்கிகள்

இத்தகைய பாரம்பரிய ரகங்களைப் பாதுகாக்கும் பணியில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் ஈடுபட்டுள்ளது. கிராமப்புறத்தில் விவசாயிகளுக்கு விதை வங்கிகள் அமைப்பதற்கு உதவுவதும், நாட்டு ரகங்களைப் பயிரிட விவசாயிகளை ஊக்குவிப்பதும் எங்கள் நோக்கமாகும். தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு கிராமங்களுக்குச் சென்று எங்கள் களப்பணியாளர்கள் பாரம்பரிய ரக நெல் விதைகளைச் சேகரித்து வருகின்றனர்.



பாரம்பரிய ரகங்களைப் பயிர் செய்யும் அனைவரையும் ஒருங்கிணைய வைத்து, இந்த நெல் வகைகளைப் பலரும் பயிர் செய்து பலன்பெற வேண்டும் என்பது எங்கள் நோக்கமாகும். எங்கள் மையத்தின் களப்பணியாளர்கள் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளுக்குச் சென்று நம்முடைய பாரம்பரிய நெல்ரகங்களைப் பாதுகாக்கும் விவசாயிகளிடமிருந்து விதைகளைச் சேகரித்து வருகின்றனர். இந்த ரகங்களின் குணாதிசயங்கள் பற்றிய விவரங்களையும் தொகுத்து வருகின்றனர். திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம், வந்தவாசியிலும், திருத்தணி மாவட்டத்தில் நெடும்பரத்திலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாணாம்பதி, திருப்போரூர், காட்டாங்களத் தூரிலும் எங்கள் மையம் கிராமப்புற விதை வங்கிகளை அமைத்துள்ளது.

காட்டாங்களத்தூரில் இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் எங்கள் மையத்துடன் இணைந்து பாரம்பரிய விதைகளைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதைத் தவிர, எங்கள் ஆய்வுப் பண்ணையிலும் இந்தப் பாரம்பரிய ரகங்கள் பயிரிடப்படுகின்றன. ஆய்வுப் பண்ணையிலிருந்தும், விவசாயிகளின் வயல்களைப் பார்வையிட்டும் பயிரின் பல்வேறு நிலைகளில் பயிர் பற்றிய விவரங்கள் முறையாகச் சேகரிக்கப்படு கின்றன. இந்தப் புத்தகத்தில் 34 பாரம்பரிய நெல்ரகங்களைப் பற்றிய விவரங்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இது போன்று அடுத்தடுத்து நெல்லைப் பற்றியும், பிற பயிர்களைப் பற்றியும் பல தொகுப்புகளை வெளியிட எண்ணியுள்ளோம்.


இந்த நெல் ரகங்கள் தேவைப்படும் விவசாயிகள் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம். இந்த ரகங்களையோ வேறு ரகங்களையோ பயிரிடும் விவசாயிகள் தங்கள் அனுபவங்களையும் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பாரம்பரிய விவசாயத்தையும், பயிர்ப் பல்வகைமையையும் பாதுகாக்க உங்கள் ஒத்துழைப்பை நாடுகிறோம்.



## பாரம்பரிய நெல் ரகப் பாதுகாப்பு

### பூரி ஜெகந்நாதர் கோவிலின் பங்கு

*ஒரிசாவில் உள்ள பூரி ஜெகந்நாதர் கோவிலில் கடவுளுக்குத் தினமும் புதிதாக அறுவடையான நெல்லைக் கொண்டே பிரசாதம் தயாரிக்கப்படுகிறது. இப்படி ஒரு பழக்கத்தை கடைப்பிடிக்க வேண்டு மென்றால் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு தினமும் அறுவடைக்கு வரும் பல நெல் ரகங்களைப் பாதுகாக்க வேண்டிய ஒரு அவசியம் உள்ளது. இப்படிப்பட்ட பழக்கத்தின் மூலம் நெல்லின் பல்வகைமை பாது காக்கப்பட்டு வருகிறது.*





# பாரம்பரிய நெல் ரகங்கள்

*இந்தப் புத்தகத்தில் 34 பாரம்பரிய நெல் ரகங்களைப் பற்றிய விவரங்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ரகத்திற்கும் சாகுபடி விவரங்கள், உழவியல் தன்மைகள், நெற்கதிர் மற்றும் நெல்மணியின் இயல்புகள், நெல் மற்றும் வைக்கோல் மகசூல் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ரகத்தின் சிறப்பம்சங்களும் விவரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ரகத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் நடவு செய்து பயிர்செய்ததின் அடிப்படையில் தொகுத்த விவரங்களாகும். புழுதி விதைப்பு அல்லது சேற்று விதைப்பு முறையில் மட்டுமே பயிர்செய்யலாம் என்றால் அந்த விவரமே தரப்பட்டிருக்கிறது.*

### பட்டங்கள்

1. *சொர்ணவாரி : சித்திரை - ஆடி (ஏப்ரல் 15 - ஆகஸ்டு 14)*
2. *சம்பா : ஆடி - மார்கழி (ஜூலை 15 - ஜனவரி 14)*
3. *பின்சம்பா : புரட்டாசி - தை (செப்டம்பர் 15 - பிப்ரவரி 14)*
4. *நவரை : மார்கழி - மாசி (டிசம்பர் 15 - மார்ச் 14)*

### விதை அளவு

*புழுதி விதைப்பு மற்றும் சேற்று விதைப்பில் ஒரு ஏக்கருக்கு 30 கிலோ விதையும், நடவுசெய்யும் போது நாற்றங்கால் தயாரிப்புக்கு ஒரு ஏக்கருக்கு 40 - 42 கிலோ நெல் விதையும் பயன்படுத்த வேண்டும்.*

### மகசூல்

*நெல் மற்றும் வைக்கோல் மகசூல் மூட்டைகள், கட்டுகள் கணக்கில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு மூட்டை நெல் 75 கிலோவும், ஒரு கட்டு வைக்கோல் 30 கிலோவும் கொண்டது.*

# தங்கச் சம்பா

## சாகுபடி விவரங்கள்

| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *சம்பா, பின்சம்பா* |
| *சாகுபடி முறை* | : | *நாற்று விட்டு நடவு செய்வது சிறந்தது.* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *மணல் கலந்த களிமண்* |

## உழவியல் தன்மைகள்

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 160 - 165 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 40 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி உயரம்* | : | 122.2 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 140.6 |
| *பயிரின் தன்மை* | : | *சாயக்கூடியது* |

## நெற்கதிரின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி நீளம்* | : | 23.8 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 24.9 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 176 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 186 |

## நெல்மணியின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவம் மற்றும் பால் பிடிக்கும் பருவத்தில் இளம் பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் பொன் நிறமாகவும் இருக்கும்.* |
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | 18.216 *கிராம்* |



| | | |
|---|---|---|
| *அரிசியின் நிறம்* | : | *வெள்ளை* |
| *அரிசியின் தரம்* | : | *சன்ன ரகம்* |

## மகசூல் (ஏக்கருக்கு)

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 20 *மூட்டைகள் (*1500 *கிலோ)* |
| *வைக்கோல் மகசூல்* | : | 60 *கட்டுகள் (*1800 *கிலோ)* |

## ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *கதிர் மிகவும் நீண்டு காணப்படும்.*
2. *இந்த ரகத்தின் அரிசி மிகவும் சன்னமாக இருப்பதால் பிரியாணி செய்வதற்கும், சாப்பாட்டிற்கும் மிக நன்றாக இருக்கும்.*
3. *தங்கத்தின் நிறத்தைப் போன்றே நெல்மணிகளின் நிறம் இருப்பதால் தங்கச்சம்பா என்று அழைக்கிறார்கள்.*



ஆய்வுப் பண்ணையில் பாரம்பரிய ரகங்கள்

# நீலஞ்சம்பா

**சாகுபடி விவரங்கள்**

| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *சம்பா* |
| *சாகுபடி முறை* | : | *நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *களிமண்* |

**உழவியல் தன்மைகள்**

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 175 - 180 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 45 - 50 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி உயரம்* | : | 132.0 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 141.5 |
| *பயிரின் தன்மை* | : | *சாயக்கூடியது* |





**நெற்கதிரின் இயல்புகள்**

| | | |
|---|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி நீளம்* | : | 24.9 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 27.5 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 185 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 191 |

**நெல்மணியின் இயல்புகள்**

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவத்தில் இளம் பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கருப்பு நிறத்திலும், முதிர்ச்சிப் பருவத்தில் கருப்பு கலந்த மஞ்சள் நிறத்திலும் காணப்படும்.* |
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | 24.899 *கிராம்* |
| *அரிசியின் நிறம்* | : | *சிகப்பு* |
| *அரிசியின் தரம்* | : | *மோட்டா* |

**மகசூல் (ஏக்கருக்கு)**

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 20 *மூட்டைகள் (*1500 *கிலோ)* |
| *வைக்கோல் மகசூல்* | : | 60 *கட்டுகள் (*1800 *கிலோ)* |

**ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்**

1. *நீர் அதிகம் தேங்கக்கூடிய இடங்களில் பயிர் செய்ய ஏற்றது. ஏரிப்பகுதிகளில் பயிர் செய்ய ஏற்ற ரகம்.*
2. *புகையான் மற்றும் கதிர்நாவாய்ப் பூச்சிக்கு எதிர்ப்புத் தன்மை கொண்டது.*
3. *இதனுடைய அரிசி அதிகப் பால் சுரக்க உதவும். எனவே இது பாலூட்டும் தாய்மார்களுக்கு ஏற்றது.*
4. *இந்த ரகத்தின் வைக்கோல் மிக உயரமாக இருப்பதால் கூரை வேயப் பயன்படுகிறது.*

## கப்பச்சம்பா

### சாகுபடி விவரங்கள்

*சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* : *சம்பா*

*சாகுபடி முறை* : *நாற்று விட்டு நடவு*

*சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* : *களிமண், மணல் கலந்த களிமண்*

### உழவியல் தன்மைகள்

*பயிரின் வயது* : 160 - 165 *நாட்கள்*

*நாற்றங்கால் வயது* : 40 *நாட்கள்*

*பயிரின் உயரம் (செ.மீ.)*

*அ) சராசரி உயரம்* : 121.6
*ஆ) அதிகபட்ச உயரம்* : 131.1

*பயிரின் தன்மை* : *சாயக்கூடியது*

### நெற்கதிரின் இயல்புகள்

*கதிரின் நீளம் (செ.மீ.)*

*அ) சராசரி நீளம்* : 21.2
*ஆ) அதிகபட்ச நீளம்* : 22.0

*கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை*

*அ) சராசரி எண்ணிக்கை* : 147
*ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* : 170

### நெல்மணியின் இயல்புகள்

*நெல்மணியின் நிறம்* : *பூப்பருவத்தில் பச்சை நிறமாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் பச்சை நிறத்தில் கருமை நிற வரிப்பள்ளங்களுடனும், முதிர்ச்சிப் பருவத்தில் மஞ்சள் நிறமாகவும் காணப்படும்.*



1000 *நெல்மணிகளின் எடை* : 23.878 *கிராம்*

*அரிசியின் நிறம்* : *சிகப்பு*

*அரிசியின் தரம்* : *மோட்டா*

### மகசூல் (ஏக்கருக்கு)

*நெல் மகசூல்* : 20 *மூட்டைகள் (*1500 *கிலோ)*

*வைக்கோல் மகசூல்* : 50 *கட்டுகள் (*1500 *கிலோ)*

### ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *இட்லி, தோசைக்கு ஏற்ற ரகம்.*
2. *பூப்பருவத்தில் கதிர்களில் உள்ள அனைத்து நெல்மணிகளின் நுனிப்பகுதியில், வெண்மை நிறமுடைய நீண்ட ஊசி போன்ற கூர்கள் காணப்படும். முதிர்ச்சியடையும் சமயத்தில் சில உதிர்ந்து விடும்.*
3. *பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மை கொண்டது.*



பாரம்பரிய ரகங்களைப் பாதுகாக்கும் விவசாயிகள்


## வாடன் சம்பா

### சாகுபடி விவரங்கள்

| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *சம்பா* |
| *சாகுபடி முறை* | : | *புழுதி விதைப்பு, நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *மணல் கலந்த களிமண்* |

### உழவியல் தன்மைகள்

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 155 - 160 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 40 - 45 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி உயரம்* | : | 97.7 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 105.4 |
| *பயிரின் தன்மை* | : | *சாயக்கூடியது* |





### நெற்கதிரின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி நீளம்* | : | 17.9 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 20.1 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 139 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 162 |

### நெல்மணியின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவத்தில் பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கரும்பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் வைக்கோல் நிறமாகவும் காணப்படும்.* |
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | 26.899 *கிராம்* |
| *அரிசியின் நிறம்* | : | *மங்கலான வெள்ளை* |
| *அரிசியின் தரம்* | : | *மோட்டா ரகம்* |

### மகசூல் (ஏக்கருக்கு)

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 15 *மூட்டைகள் (*1125 *கிலோ)* |
| *வைக்கோல் மகசூல்* | : | 40 *கட்டுகள் (*1200 *கிலோ)* |

### ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *இட்டிலி, தோசை செய்வதற்கு ஏற்ற ரகம்.*
2. *நெல்மணிகள் உதிரக்கூடியதால் பச்சையாக இருக்கும் போதே அறுவடை செய்துவிட வேண்டும்.*
3. *வறட்சியை நன்றாகத் தாங்கக்கூடியது.*
4. *பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மை கொண்டது.*

## குதிரைவால் சம்பா

### சாகுபடி விவரங்கள்

| | |
|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : *சம்பா* |
| *சாகுபடி முறை* | : *புழுதி விதைப்பு, நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : *களிமண்* |

### உழவியல் தன்மைகள்

| | |
|---|---|
| *பயிரின் வயது* | : 165 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : 40 - 45 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | |
| *அ) சராசரி உயரம்* | : 103.5 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : 110.0 |
| *பயிரின் தன்மை* | : *மிதமாகச் சாயக்கூடியது.* |

### நெற்கதிரின் இயல்புகள்

| | |
|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | |
| *அ) சராசரி நீளம்* | : 23.4 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : 25.2 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : 153 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : 183 |

### நெல்மணியின் இயல்புகள்

| | |
|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : *பூப்பருவத்தில் இளம் பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கரும்பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் மஞ்சள் நிறத்தில் கறுப்பு நிற நீள வரிக்கோடுகளுடனும் காணப்படும்.* |





| | |
|---|---|
| 1000 *நெல்மணிகளின் எடை* | : 22.093 *கிராம்* |
| *அரிசியின் நிறம்* | : *வெள்ளை* |
| *அரிசியின் தரம்* | : *நடுத்தரமானது* |

### மகசூல் (ஏக்கருக்கு)

| | |
|---|---|
| *நெல் மகசூல்* | : 20 *மூட்டைகள்* (1500 *கிலோ)* |
| *வைக்கோல் மகசூல்* | : 60 *கட்டுகள் (*1800 *கிலோ)* |

### ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *மானாவாரியாகப் பயிர் செய்வதைவிட நாற்று விட்டு நடவு செய்வது சிறப்பு.*
2. *சாப்பாட்டிற்கு நன்றாக இருக்கும்.*
3. *நீர் அதிகம் தேங்கும் வயல்களிலும் பயிர் செய்யலாம்.*
4. *பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மை கொண்டது.*

# கலியன் சம்பா

## சாகுபடி விவரங்கள்


| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *சம்பா* |
| *சாகுபடி முறை* | : | *நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *களிமண், மணல் கலந்த களிமண்* |

## உழவியல் தன்மைகள்

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 155 - 160 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 40 *நாட்கள்* |

*பயிரின் உயரம் (செ.மீ.)*

| | | |
|---|---|---|
| *அ) சராசரி உயரம்* | : | 124 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 157 |
| *பயிரின் தன்மை* | : | *சாயக்கூடியது.* |





## நெற்கதிரின் இயல்புகள்

*கதிரின் நீளம் (செ.மீ.)*

| | | |
|---|---|---|
| *அ) சராசரி நீளம்* | : | 22.4 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 24.6 |

*கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை*

| | | |
|---|---|---|
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 145 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 167 |

## நெல்மணியின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவத்தில் இளம் பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கரும்பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் மஞ்சள் நிறமாகவும் காணப்படும்.* |
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | 29.468 *கிராம்* |
| *அரிசியின் நிறம்* | : | *சிகப்பு* |
| *அரிசியின் தரம்* | : | *மோட்டா ரகம்* |

## மகசூல் (ஏக்கருக்கு)

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 16 *மூட்டைகள்* (1200 *கிலோ)* |
| *வைக்கோல் மகசூல்* | : | 53 *கட்டுகள் (*1600 *கிலோ)* |

## ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *மிகவும் உயரமாக வளரக்கூடிய ரகம் (167 செ.மீ.).*
2. *மோட்டா ரகமாக இருப்பதால் இட்டிலி, தோசை தயார் செய்ய ஏற்ற ரகம்.*
3. *நீர்ப்பிடிப்பு அதிகம் உள்ள பகுதிகளிலும் மிகவும் தாழ்வான பகுதிகளிலும் சாகுபடி செய்ய ஏற்றது.*
4. *பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மை உடையது.*

## குரங்குச் சம்பா

### சாகுபடி விவரங்கள்

| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *சம்பா* |
| *சாகுபடி முறை* | : | *நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *மணல் கலந்த களிமண்* |

### உழவியல் தன்மைகள்

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 150 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 35 - 40 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி உயரம்* | : | 135.7 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 149.6 |
| *பயிரின் தன்மை* | : | *சாயக்கூடியது.* |

### நெற்கதிரின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி நீளம்* | : | 28.0 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 28.9 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 208 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 267 |

### நெல்மணியின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவத்தில் இளம் பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கரும்பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் வைக்கோல் நிறமாகவும் காணப்படும்.* |
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | 19.161 *கிராம்* |



| | | |
|---|---|---|
| *அரிசியின் நிறம்* | : | *வெள்ளை* |
| *அரிசியின் தரம்* | : | *சன்ன ரகம்* |

### மகசூல் (ஏக்கருக்கு)

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 23 *மூட்டைகள் (*1725 *கிலோ)* |
| *வைக்கோல் மகசூல்* | : | 60 *கட்டுகள் (*1800 *கி.)* |

### ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *மற்ற ரகங்களைக் காட்டிலும் இந்த ரகத்தினுடைய கதிரின் நீளம் அதிகம்.*
2. *ஒரு கதிரில் 267 நெல் மணிகள் வரை இருக்கும்.*
3. *சாப்பாடுக்கு மிக ஏற்றது.*
4. *நீர்ப்பிடிப்புப் பகுதி மற்றும் வறட்சியான பகுதிகளிலும் வளரும்.*
5. *பூச்சி மற்றும் நோய்க்கு எதிர்ப்புத் தன்மை உடையது.*



ஆய்வுப் பண்ணையில் நாற்றுப் பறித்தல்
(திரு. ஈ. தாமோதரன்)

## சீரகச் சம்பா

### சாகுபடி விவரங்கள்

| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *சம்பா, நவரை* |
| *சாகுபடி முறை* | : | *நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *களிமண் மற்றும் மணல் கலந்த களிமண்* |

### உழவியல் தன்மைகள்

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 125 - 130 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 30 - 35 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி உயரம்* | : | 80.5 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 93.2 |
| *பயிரின் தன்மை* | : | *சாயாதது.* |



சீரகச் சம்பா வயலில் திருமதி கனகா



### நெற்கதிரின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி நீளம்* | : | 21.9 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 23.5 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 162 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 186 |

### நெல்மணியின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவத்தில் இளம் பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் அடர் பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் வைக்கோல் நிறமாகவும் காணப்படும்.* |
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | - |
| *அரிசியின் நிறம்* | : | *வெள்ளை, வாசனையுள்ளது* |
| *அரிசியின் தரம்* | : | *மிகவும் சன்ன ரகம்* |

### மகசூல் (ஏக்கருக்கு)

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 20 *மூட்டைகள் (*1500 *கிலோ)* |
| *வைக்கோல் மகசூல்* | : | 35 *கட்டுகள் (*1050 *கிலோ)* |

### ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *இதன் அரிசி சீரகத்தின் வடிவத்தை ஒத்துள்ளதால் இதற்குச் சீரகச் சம்பா என்று பெயரிடப்பட்டிருக்கிறது.*
2. *அரிசி சன்னமாக இருப்பதாலும், வாசனை உடையதாக இருப்பதாலும் பிரியாணி செய்வதற்குச் சிறந்தது.*
3. *இதைப் பயிர் செய்யும் இடத்தில் தண்ணீர் அதிகம் தேங்கக் கூடாது.*
4. *வாசனை ரகமாதலால் அதிக விலை கிடைக்கிறது. தமிழகத்தின் பாரம்பரிய ரகங்களிலேயே அதிக விலை கிடைக்கக்கூடிய ரகம்.*

## சம்பா

**சாகுபடி விவரங்கள்**

| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *சம்பா* |
| *சாகுபடி முறை* | : | *புழுதி விதைப்பு, நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *களிமண்* |

**உழவியல் தன்மைகள்**

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 160 - 165 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 40 - 45 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி உயரம்* | : | 105 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 117 |
| *பயிரின் தன்மை* | : | *மிதமாகச் சாயக்கூடியது* |


**நெற்கதிரின் இயல்புகள்**

| | | |
|---|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி நீளம்* | : | 23 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 28 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 140 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 150 |

**நெல்மணியின் இயல்புகள்**

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவத்தில் கரும்பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கரும்பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் மஞ்சள் நிறமாகவும் காணப்படும்.* |





| | | |
|---|---|---|
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | 24.651 *கிராம்* |
| *அரிசியின் நிறம்* | : | *வெள்ளை* |
| *அரிசியின் தரம்* | : | *மோட்டா ரகம்* |

**மகசூல் (ஏக்கருக்கு)**

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 22 *மூட்டைகள் (*1650 *கிலோ)* |
| *வைக்கோல் மகசூல்* | : | 60 *கட்டுகள் (*1800 *கிலோ)* |

**ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்**

1. *சாப்பாட்டுக்கும், இட்லி, தோசைக்கும் ஏற்றது.*
2. *நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும், களிநிலம், களர் நிலங்களிலும் நன்றாக வளரும்.*
3. *பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மை உடையது.*

## சம்பா மோசனம்

### சாகுபடி விவரங்கள்

*சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* : *சம்பா*

*சாகுபடி முறை* : *புழுதி விதைப்பு, நாற்று விட்டு நடவு*

*சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* : *களிமண்*

### உழவியல் தன்மைகள்


*பயிரின் வயது* : 160 - 165 *நாட்கள்*

*நாற்றங்கால் வயது* : 40 - 45 *நாட்கள்*

*பயிரின் உயரம் (செ.மீ.)*

*அ) சராசரி உயரம்* : 134.2
*ஆ) அதிகபட்ச உயரம்* : 150.2

*பயிரின் தன்மை* : *சாயக்கூடியது.*





### நெற்கதிரின் இயல்புகள்

*கதிரின் நீளம் (செ.மீ.)*

*அ) சராசரி நீளம்* : 25.7
*ஆ) அதிகபட்ச நீளம்* : 26.3

*கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை*

*அ) சராசரி எண்ணிக்கை* : 162
*ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* : 213

### நெல்மணியின் இயல்புகள்

*நெல்மணியின் நிறம்* : *பூப்பருவத்தில் இளம்பச்சையாகவும், பால்பிடிக்கும் நேரத்தில் கருப்பு நிறத்தில் பச்சைநிற நீள வரிக்கோடுகளுடனும், முதிர்ச்சிப் பருவத்தில் வைக்கோல் நிறத்திலும் காணப்படும்.*

1000 *நெல்மணிகளின் எடை* : 28.677 *கிராம்*

*அரிசியின் நிறம்* : *சிகப்பு*

*அரிசியின் தரம்* : *மோட்டா*

### மகசூல் (ஏக்கருக்கு)

*நெல் மகசூல்* : 24 *மூட்டைகள் (*1800 *கிலோ*

*வைக்கோல் மகசூல்* : 65 *கட்டுகள் (*1950 *கிலோ)*

### ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *இந்த ரகத்திற்குப் புழுதிக்கால், ஏரி நெல், மடுவு முழுங்கி போன்ற பிற பெயர்களும் உண்டு. ஏரிப்பகுதிக்கு மிகவும் ஏற்ற ரகம். படகில் சென்று ஏரிப்பகுதிகளிலிருந்து இதை அறுவடை செய்ததாகக் கூறுகின்றனர்.*

2. *அவல் செய்வதற்கு ஏற்ற ரகம்.*

3. *இட்லி, தோசை செய்வதற்கு ஏற்றது.*

## கிச்சிலிச் சம்பா

### சாகுபடி விவரங்கள்

| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *சம்பா* |
| *சாகுபடி முறை* | : | *புழுதி விதைப்பு, நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *மணல் கலந்த களிமண்* |

### உழவியல் தன்மைகள்

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 135 - 140 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 30 - 35 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி உயரம்* | : | 102.2 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 118.6 |
| *பயிரின் தன்மை* | : | *சாயக்கூடியது.* |

### நெற்கதிரின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி நீளம்* | : | 21.7 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 22.8 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 96 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 131 |

### நெல்மணியின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவத்தில் இளம் பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கரும்பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் வைக்கோல் நிறமாகவும் காணப்படும்.* |



| | | |
|---|---|---|
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | 17.005 *கிராம்* |
| *அரிசியின் நிறம்* | : | *வெள்ளை* |
| *அரிசியின் தரம்* | : | *சன்ன ரகம்* |

### மகசூல் (ஏக்கருக்கு)

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 15 *மூட்டைகள் (*1125 *கிலோ)* |
| *வைக்கோல் மகசூல்* | : | 35 *கட்டுகள் (*1050 *கிலோ)* |

### ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *சாப்பாட்டிற்கு மிக நன்றாக இருக்கும்.*
2. *பிரியாணி செய்வதற்குக்கூடப் பயன்படுத்துகிறார்கள்.*
3. *இந்த ரகம் மானாவாரிக்கும் ஏற்றது.*
4. *பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் கொண்டது.*



கிச்சிலிச் சம்பா வயலில் திரு. கண்ணன், திரு. ஆறுமுகசாமி


# முட்டக்கார்

## சாகுபடி விவரங்கள்

| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *நவரை* |
| *சாகுபடி முறை* | : | *சேற்று விதைப்பு, நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *களிமண், மணல் கலந்த களிமண்* |

## உழவியல் தன்மைகள்

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 120 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 30 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி உயரம்* | : | 100.6 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 135.4 |
| *பயிரின் தன்மை* | : | *பால்பிடிக்கும் பருவம் முடிந்தவுடன் சாயத் தொடங்கி விடும். இதனால் பயிருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.* |





## நெற்கதிரின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி நீளம்* | : | 19.25 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 25.8 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 80 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 100 |

## நெல்மணியின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவத்தில் இளம் பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கரும்பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் வைக்கோல் நிறமாகவும் காணப்படும்.* |
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | 22.025 *கிராம்* |
| *அரிசியின் நிறம்* | : | *சிகப்பு* |
| *அரிசியின் தரம்* | : | *மோட்டா ரகம்* |

## மகசூல் (ஏக்கருக்கு)

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 18 *மூட்டைகள் (*1350 *கிலோ)* |
| *வைக்கோல் மகசூல்* | : | 40 *கட்டுகள் (*1200 *கிலோ)* |

## ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *இட்லி, தோசை தயார் செய்வதற்குச் சிறந்த ரகம்.*
2. *பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மை கொண்டது.*

# குள்ளக்கார்

## சாகுபடி விவரங்கள்

| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *சொர்ணவாரி, நவரை* |
| *சாகுபடி முறை* | : | *புழுதி விதைப்பு, சேற்று விதைப்பு, நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *களிமண், மணல் கலந்த களிமண்* |

## உழவியல் தன்மைகள்

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 100 - 110 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 21 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி உயரம்* | : | 87 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 100 |
| *பயிரின் தன்மை* | : | *சாயக்கூடியது.* |


## நெற்கதிரின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி நீளம்* | : | 20 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 23 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 60 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 105 |

## நெல்மணியின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவத்தில் இளம் பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கரும்பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் இளம் வைக்கோல் நிறமாகவும் காணப்படும்.* |





| | | |
|---|---|---|
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | 28.000 *கிராம்* |
| *அரிசியின் நிறம்* | : | *சிகப்பு* |
| *அரிசியின் தரம்* | : | *மோட்டா ரகம்* |

## மகசூல் (ஏக்கருக்கு)

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 20 *மூட்டைகள் (*1500 *கிலோ.)* |
| *வைக்கோல் மகசூல்* | : | 50 *கட்டுகள் (*1500 *கிலோ)* |

## ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *எல்லா மோட்டா ரகங்களையும்விட இட்லி, தோசை செய்வதற்கு மிகவும் ஏற்றது. கஞ்சிக்கும் ஏற்ற ரகம்.*
2. *மூன்று மாதக் காலப் பயிர். ஆடி, ஆவணியில் நெல் விதைப்பாகவும், நவரைப் பட்டத்தில் சேற்று விதைப்பாகவும், சொர்ணவாரிப் பருவத்தில் நாற்று விட்டும் பயிர் செய்யப்படுகிறது.*
3. *இந்த ரகம் வறட்சித் தாங்கி வளரக்கூடியது. ஆனால் நீர் அதிகம் தேங்கக்கூடாது.*
4. *பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி கொண்டது.*
5. *இதன் வைக்கோல் கூரை வேய்வதற்கு அதிகமாகப் பயன் படுத்தப்படுகிறது.*


## கப்பக்கார்

### சாகுபடி விவரங்கள்

| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *சம்பா* |
| *சாகுபடி முறை* | : | *புழுதி விதைப்பு, நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *களிமண்* |

### உழவியல் தன்மைகள்

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 150 - 160 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 40 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி உயரம்* | : | 123 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 130 |
| *பயிரின் தன்மை* | : | *மிதமாகச் சாயக்கூடியது.* |



கப்பக்கார் வயலில் திரு. ஜெயபால்



### நெற்கதிரின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி நீளம்* | : | 21 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 24 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 162 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 240 |

### நெல்மணியின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவத்தில் இளம் பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கறுப்பு நிறத்தில் பச்சை நிற நீள வரிக்கோடுகளுடனும் முதிர்ச்சிப் பருவத்தில் அடர் பழுப்பு நிறமாகவும் காணப்படும்.* |
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | 26.811 *கிராம்* |
| *அரிசியின் நிறம்* | : | *பழுப்பு* |
| *அரிசியின் தரம்* | : | *மோட்டா ரகம்* |

### மகசூல் (ஏக்கருக்கு)

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 18 *மூட்டைகள் (*1350 *கிலோ)* |
| *வைக்கோல் மகசூல்* | : | 60 *கட்டுகள் (*1800 *கிலோ)* |

### ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *இட்லி, தோசை தயாரிப்பதற்குச் சிறந்த ரகம்.*
2. *களிமண் பாங்கான நிலத்தில் அதிக மகசூல் தரக்கூடியது.*
3. *அதிக நீர்ப்பிடிப்பையும், வறட்சியையும் தாங்கக்கூடியது.*
4. *அவல் குத்துவதற்கும் ஏற்றது.*
5. *சீமந்தம் போன்ற விசேஷங்களில் கிராமப்புறங்களில் விருந்திற்குப் பயன்படுத்துகின்றனர்.*

## பெருங்கார்

### சாகுபடி விவரங்கள்

*சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* : *நவரை*

*சாகுபடி முறை* : *நாற்று விட்டு நடவு*

*சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* : *களிமண்*

### உழவியல் தன்மைகள்

*பயிரின் வயது* : 130 *நாட்கள்*

*நாற்றங்கால் வயது* : 30 - 35 *நாட்கள்*

*பயிரின் உயரம் (செ.மீ.)*

*அ) சராசரி உயரம்* : 124.6
*ஆ) அதிகபட்ச உயரம்* : 131.1

*பயிரின் தன்மை* : *சாயக்கூடியது*

### நெற்கதிரின் இயல்புகள்

*கதிரின் நீளம் (செ.மீ.)*

*அ) சராசரி நீளம்* : 21.2
*ஆ) அதிகபட்ச நீளம்* : 23.7

*கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை*


*அ) சராசரி எண்ணிக்கை* : 104
*ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* : 122

### நெல்மணியின் இயல்புகள்

*நெல்மணியின் நிறம்* : *பூப்பருவத்தில் இளம் பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கரும்பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் மஞ்சள் நிறமாகவும் காணப்படும்.*

1000 *நெல்மணிகளின் எடை* : 23.642 *கிராம்*





*அரிசியின் நிறம்* : *சிகப்பு*

*அரிசியின் தரம்* : *மோட்டா*

### மகசூல் (ஏக்கருக்கு)

*நெல் மகசூல்* : 18 *மூட்டைகள் (*1350 *கிலோ)*

*வைக்கோல் மகசூல்* : 60 *கட்டுகள் (*1800 *கிலோ)*

### ரகத்தின் மற்ற சிறப்பம்சங்கள்

1. *இட்லி, தோசை தயார் செய்வதற்கு ஏற்ற ரகம்.*
2. *பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி கொண்டது.*
3. *நீர்ப்பிடிப்பு அதிகம் காணப்படும் பகுதிகளில் சாகுபடி செய்ய ஏற்றது.*

## சிகப்புக் குருவிக்கார்

### சாகுபடி விவரங்கள்

| | | |
|---|---|---|
| *சாகுபடிக்கு ஏற்ற பட்டம்* | : | *சம்பா, பின்சம்பா* |
| *சாகுபடி முறை* | : | *புழுதி விதைப்பு, நாற்று விட்டு நடவு* |
| *சாகுபடிக்கு ஏற்ற மண்வகை* | : | *மணல் கலந்த களிமண்* |

### உழவியல் தன்மைகள்

| | | |
|---|---|---|
| *பயிரின் வயது* | : | 120 - 125 *நாட்கள்* |
| *நாற்றங்கால் வயது* | : | 25 - 28 *நாட்கள்* |
| *பயிரின் உயரம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி உயரம்* | : | 95.0 |
| *ஆ) அதிகபட்ச உயரம்* | : | 102.9 |
| *பயிரின் தன்மை* | : | *சாயக்கூடியது.* |

### நெற்கதிரின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *கதிரின் நீளம் (செ.மீ.)* | | |
| *அ) சராசரி நீளம்* | : | 21.4 |
| *ஆ) அதிகபட்ச நீளம்* | : | 22.7 |
| *கதிரில் உள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை* | | |
| *அ) சராசரி எண்ணிக்கை* | : | 86 |
| *ஆ) அதிகபட்ச எண்ணிக்கை* | : | 110 |

### நெல்மணியின் இயல்புகள்

| | | |
|---|---|---|
| *நெல்மணியின் நிறம்* | : | *பூப்பருவத்தில் கரும்பச்சையாகவும், பால்பிடிக்கும் பருவத்தில் கரும்பச்சையாகவும், முதிர்ச்சிப் பருவத்தில் அடர் மஞ்சள் நிற மணியில் லேசான கருமை நிற நீள வரிக்கோடுகளுடன் காணப் படும்.* |



| | | |
|---|---|---|
| 1000 *நெல்மணிகளின் எடை* | : | 34.169 *கிராம்* |
| *அரிசியின் நிறம்* | : | *பழுப்பு* |
| *அரிசியின் தரம்* | : | *மோட்டா ரகம்* |

### மகசூல் (ஏக்கருக்கு)

| | | |
|---|---|---|
| *நெல் மகசூல்* | : | 14 *மூட்டைகள்* (1050 *கி.*) |
